IN THE COURT OF THE DISTRICT MUNSIF OF ARAKKONAM

OS. 71/2023

Deposition of Witness : PW 1

Name : ஏகாம்பரம் (வயது – 50)

Father's Name /W/o : த/பெ ஆறுமுகம்

Religion : இந்து

Caste : –

Calling : –

Address : காஞ்சிபுரம்

Solemnly affirmation accordance with the provision of Act X 1873 on the day of 25.08.2025.

## பிரதிவாதி 2 மற்றும் 3 தரப்பில் குறுக்கு விசாரணை

1. தாவா சொத்து எந்த ஊரில் உள்ளது என்றால் சங்கரன்பாடி. தாவா சொத்தின் சர்வே எண் என்னவென்றால் 209/4. தாவா சொத்து நஞ்சையா புஞ்சையா என்றால் புஞ்சை. தாவா சொத்து விஸ்தீரணம் என்னவென்றால் 2 ஏக்கர் 49 1/2 செண்ட். வழக்கு யார் யார் தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் ராமன், வில்வம், சாதாசிவம், வெற்றிவேல், ஏகாம்பரம்.

2. வழக்கு எதற்காக தாக்கல் செய்துள்ளோம் என்றால் ஆவணங்கள், பட்டாவை ரத்து செய்ய கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளோம். மேற்படி ஆவணம் யார் யாருக்கு எழுதி கொடுத்தது என்றால் முருகன் அவருடைய மகன்களுக்கு எழுதி கொடுத்த ஆவணம். தாவா சொத்துக்கு என் பெயரில் பட்டா இல்லை என்றால் சரிதான். தாவா சொத்துக்கு ஆதியிலிருந்து முருகன் பெயரில் தான் பட்டா உள்ளது என்றால் சரிதான். சுமார் 50 வருடத்திற்கு மேல் முருகன் பெயரில் தான் தாவா சொத்து குறித்து பட்டா உள்ளது என்றால் சரியல்ல.

3. என் தந்தை இறந்தபிறகு முருகன் மூத்தவர் என்பதால் அவர் பெயரில் பட்டா மாற்றப்பட்டது. தாவா சொத்து குறித்து என் தந்தை ஆறுமுகம் பெயரில் பட்டா இருந்ததற்கான ஆவணம் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. என் தந்தை இறந்த பிறகு முருகன் மூத்தவர் என்பதார் அவர் பெயரில் பட்டா மாற்றம் செய்யப்பட்டது குறித்து நான் என் தாவாவில் தெரிவித்துள்ளேனா என்றால் தெரிவித்துள்ளேன். நான் மேற்படி விபரத்தை என் தாவாவில் தெரிவிக்கவில்லை என்றால் சரியல்ல. தாவா சொத்தை நாங்கள் அனுபவித்தோம் என்பதற்கான ஆவணங்கள் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் இல்லை.

4. வழக்கு சொத்திற்கான பட்டா முருகன் பெயரில் தான் உள்ளது என்றால் சரிதான். பட்டா எண் என்னவென்றால் 111. எந்த வருடத்தில் முருகன் பெயரில் பட்டா அரசாங்கத்திடமிருந்து பட்டா வழங்கப்பட்டது என்றால் தெரியாது. என் தந்தை எந்த ஆண்டில் இறந்தார் என்றால் 09.02.1986 தேதியன்று இறந்தார். என் தந்தை இறந்த பிறகு முருகன் பெயரில் பட்டா மாற்றப்பட்டதா அல்லது தந்தை இறப்பதற்கு முன்பிலிருந்து முருகன் பட்டா பெயரில் இருந்ததா என்றால் என் தந்தை இறந்த பிறகு தான் முருகன் பெயரில் பட்டா மாற்றப்பட்டது.

5. என் தந்தை இறக்கும் வரை என் தந்தை ஆறுமுகம் பெயரில் தான் பட்டா இருந்ததற்கு இந்நீதிமன்றத்தல் எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். என் தந்தை ஆறுமுகம் இறந்த பிறகு முருகன் பெயரில் பட்டா செய்யப்பட்டது என்று எனக்கு அன்றைய தேதியிலே தெரியுமா என்றால் தெரியாது எனக்கு அப்போது 9 வயது. வழக்கு தாக்கல் செய்த மற்ற வாதிகள் அனைவரும் எனக்கு மூத்தவர்கள் என்றால் சரிதான். அவர்களுக்கும் சேர்த்துதான் பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான்.

6. என் தந்தை இறக்கும் போது மற்ற வாதிகளுக்கு என்ன வயது என்றால் வெற்றிவேல் சிறார் ஆக இருந்தார் மற்றவர்கள் அனைவருக்கும் 18 வயது பூர்த்தியாகிவிட்டது. 1 முதல் 3 வாதிகளுக்கு ஆறுமுகம் பெயரில் இருந்து முருகன் பெயருக்கு பட்டா மாற்றம் செய்த விபரம் தெரிந்திருக்கும் என்றால் சரிதான். வழக்கு சொத்து எங்களுக்கு உரிமை என்று எந்த அடிப்படையில் நான் கோருகிறேன் என்றால் என் தாத்தா சொத்து மற்றும் என் தந்தை சொத்து அதனால் கோருகிறேன்.

7. என் தந்தை கிரையம் பெற்ற சொத்திற்கு அசல் பத்திரம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை சான்றிட்ட நகல் தான் தாக்கல் செய்துள்ளேன். அசல் பத்திரம் என்ன ஆனது என்றால் தெரியாது. அசல் பத்திரம் ஏன் தாக்கல் செய்யவில்லை என்ற விபரம் தெரிவிக்கவில்லை என்றால் சரிதான்.

**(2 மற்றும் 3 பிரதிவாதி வழக்கறிஞர் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி வேறு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது.)**